*கவனிக்க.- 2025 ஆம் ஆண்டிற்கான கண்டி மாவட்டத்திற்குரிய நீதாசன வலயத்திற்குட்பட்ட யூரிமார்களின பட்டியல் இம்முறை தமிழ், ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2448 - 2025 අගෝස්තු 01 වැනි සිකුරාදා - 2025.08.01

2448 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 768 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 769 |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கப{ர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, ஓகத்து மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 08,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

767 - B 82705 - 403 (2025/08)

# அரசாங்க அறிவித்தல்கள்

## 2025 சிறுபோக கூட்டத்தின் தீர்மானங்களை அறிவித்தல் - தம்பவின்ன திட்டம்

வெலிமடை பிரதேச செயலகப் பிரிவில் தம்பவின்ன திட்டத்தில் 2025 ஆம் ஆண்டு சிறுபோக கூட்டம் 2025.07.15 ஆந் திகதி பி. ப. 01.00 மணிக்கு தம்பவின்ன சனசமூக மண்டபத்தில் இடம்பெற்றதுடன் அங்கு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1. நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட விவசாய அமைப்புகளால் பராமரிப்பு பணிகளை முடிக்க முன்மொழியப்பட்ட திகதி - 2025.07.12
2. பயிரிட உத்தேசிக்கப்பட்ட நிலத்தின் அளவு - 250 ஏக்கர்
3. பயிரிட உத்தேசிக்கப்பட்ட பயிர் மற்றும் பயிர் வகை - மலையக மரக்கறி
4. கால்வாய் சுத்தம் செய்வதற்கும் மற்றும் சேற்று மண் அகற்றுவதற்குமான இறுதி திகதி - 2025.07.12
5. நீர் விடுவதற்காக முன்மொழியப்பட்ட ஆரம்ப திகதி - 2025.07.16
6. நிலத்தை தயார் செய்தல் மற்றும் பயிர் நட முன்மொழியப்பட்ட இறுதி திகதி - 2025.07.30
7. பகுதி நீரை வெளியிட முன்மொழியப்பட்ட தொடக்க திகதி - தேவைக்கு ஏற்றவாறு
8. நீரை வெளியிடுவதற்கான முன்மொழியப்பட்ட இறுதி திகதி - 2025.11.30
9. கால்வாய் சுத்தம் செய்யாததற்கான அபராதம் (நெல் பேலுக்கானது) - ரூபா 2,000.00

1994 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நீர்ப்பாசன (திருத்தப்பட்ட) நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் பிரிவு 11 இன் 1 மற்றும் 2 உபபிரிவின் கீழ் போகம் தொடர்பாக உருவாக்கப்பட்ட விதிகள்,

**கால்வாய் சுத்தம் செய்யாதவர்களுக்கு அபராத தொகை பரிந்துரைத்தல்.**

தனக்கு சொந்தமான கால்வாய் பகுதியை சுத்தம் செய்யாவிட்டால் அதற்கான அபராத தொகையை அறவிட்டு விவசாய அமைப்பின் கணக்கில் வரவு வைத்து, அத்தொகையை பயன்படுத்தி விவசாய அமைப்பு கால்வாயை சுத்தம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் திட்ட குழுவின் முடிவுகளின்படி நீர் விநியோகம் நிறுத்தப்படும்.

**அனுமதியற்ற நீர் நுகர்வு**

(1) கருவிகளின் பயன்பாடு

அனுமதியளிக்கப்படாத கருவிகளை பயன்படுத்தி நீர் நுகர்வு செய்தால் அப்பொருட்கள் அரச பொருட்களாக மாற்றப்படும்.

(2) நீர் மாற்று கட்டமைப்புகளுக்கு சேதம் விளைவித்தல்

நீர்ப்பாசன திணைக்கள மதிப்பீட்டின்படி அத்தொகையை சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து வசூலித்து விவசாய அமைப்பு தலையீடு செய்து கட்டமைப்பை சீரமைக்க வேண்டும். இல்லையெனில் நீர் விநியோகம் நிறுத்தப்படும்.

**கூட்டத்தின் முடிவினை மாற்றம் செய்தல்**

கூட்டத்தின் முடிவினை இன்னொரு சட்டபூர்வமான கூட்டத்தில் மட்டுமே மாற்ற முடியும்.

வீ. பீ. சுனெத் ஜினேன்திரசேன,
பிரதேச செயலாளர்,
வெலிமடை.

வெலிமடை பிரதேச செயலக காரியாலயத்தில்,
2025.07.16 ஆந் திகதி.

08-07

### சகலரும் தெரிந்து கொள்வதற்காக

அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரின் 175 ஆம் அதிகாரசபையான வழிபாட்டு பயண கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பந்திக்கு அமைவாக உருவாக்கிய கட்டளைக்கு அமைவாக 2008, ஓகத்து மாதம் 15 ஆம் திகதி அரச வர்த்தமானி மூலம் ஹங்குரன்கெத்த ஸ்ரீ மகா விஷ்ணு தேவாலயத்தின் பெரஹெரா வர்த்தமானி பெரஹெராவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த கட்டளை அடிப்படையில் 2025 ஆம் ஆண்டுக்கான ஹங்குரன்கெத்த வரலாற்று சிறப்புமிக்க ஹங்குரன்கெத்த ஸ்ரீ மகா விஷ்ணு தேவாலயத்தின் எசல பெரஹெரா 2025, ஓகத்து மாதம் 23 ஆந் திகதி தொடக்கம் 2025, செத்தெம்பர் 08 ஆந் திகதி வரையில் நடபெறும் என்பதை சகலரும் தெரிந்துகொள்வதற்காக அறிவிக்கின்றேன்.

வை. எம். ஏ. மிகிராந் பண்டார,
பிரதேச செயலாளர்,
ஹங்குரன்கெத்த.

08-16

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆவது சிறப்பு சட்டப்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கிளை : காலி நகர கிளை
கடன் கணக்கு இலக்கம் : மிகைப்பற்று (1270006029)

(காலஞ்சென்ற கதலுவ லியனகே பந்துல அல்லது பந்துல கதலுவ லியனகே அவர்களின் காணி நிர்வாகம் செய்வதற்காக, நிர்வாகியாக காலி மாவட்ட நீதிமன்றத்தில் T/543 இலக்கமுடைய வழக்கில் நியமித்துள்ள கோவிந்த ரத்நாயக்க வாசல முதியன்சேலாகே நாமலி மெணிகே வீரகோன்)

O/A - கிரண்ட் காமன்ட்ஸ்

2024.01.30 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையின் கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காலி பிரசித்த நொத்தாரிசு பி. எஸ். எல். த சில்வா அவர்களால் 2015.11.12 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டு முறி இல. 87 மற்றும் 2016.12.09 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 272 என்ற ஈட்டுமுறியின் மூலம், கீழே ஆதனஇடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட காணி மற்றும் வளாகம் அடகுவைக்கப்பட்டுள்ளதோடு, "கிரண்ட் காமன்ட்ஸ்" என்ற பெயரின், தலைப்பின் மற்றும் நிறுவனத்தின் கீழ் தனி உரிமையாளராக வியாபாரத்தை நடாத்திச் செல்லும், காலி, வெக்வெல்ல, "காமினி விலா" வில் கதலுவ லியனகே பந்துல அல்லது பந்துல கதலுவ லியனகே (தற்பொழுது காலஞ்சென்ற) கடனாளியாகவும் மற்றும் மேற்குறித்த வசதிகளோடு மீளச்செலுத்துவதற்காக பிணையாக, கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பெயருக்கு எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட மேற்குறித்த ஈட்டு முறி இல. 87 மற்றும் 272 மீது பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தொகை செலுத்துவதற்கு, மேற்குறித்த காலஞ்சென்ற கதலுவ லியனகே பந்துல அல்லது பந்துல கதலுவ லியனகே மற்றும்/ அல்லது கோவிந்த ரத்நாயக்க வாசல முதியன்சேலாகே நாமலி மெணிகே வீரகோன் மேற்குறித்த நிர்வாகியாக புறக்கணித்துள்ளதாலும்,

மற்றும் மேற்குறித்த ஈட்டுமுறியின் கீழ் (கையடக்க கணக்கு இல. : 1270006029 மீது மிகைப்பற்று வசதிகளோடு சம்பந்தமாக) ஏனைய காரணங்களோடு, ரூபாய் இருபத்தேழு மில்லியன் (ரூபா 27,000,000.00) பணத்தொகையை, 2023, நவெம்பர் 17 ஆந் திகதியாகும் பொழுது, கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு தற்பொழுது அறவிடப்பட வேண்டிய மற்றும் பெற்றுக்கொள்ள வேண்டிய, மேற்குறித்த ரூபாய் இருபத்தேழு மில்லியன் (ரூபா 27,000,000.00) பணத்தொகை அறவிடுவதற்காக மற்றும் 2023, நவெம்பர் 18 ஆந் திகதி முதல் விற்பனை திகதி வரை காலத்திற்கு மேற்குறித்த ரூபாய் 27,000,000.00 பணத்தொகையின் மீது வருடத்திற்கு 29% வீதம் மேலதிக வட்டியோடும், பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவு மற்றும் ஏனைய கட்டணங்களோடு உள்ளடங்களாக, தற்பொழுது பெற்றுக் கொள்ளும் பணத்தோடும் சேர்த்து கழித்து, மேற்குறித்த ஈட்டுமுறி இல. 87 மற்றும் 272 என்ற ஈட்டுமுறியின் மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு அடகு வைக்கப்பட்டுள்ளதோடு, கீழே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட விபரத்தோடு, காணி மற்றும் வளாகம், மஹரகம, கடுவாவல வீதி, இல. 30/83 என்ற விலாசத்தில் அத்தோடு கொழும்பு 08, பொரல்ல, சுப்பர் மார்கட் கட்டிடத்தொகுதி, 1 ஆவது மாடி, இல. 7/1/10 என்ற இடத்தில் அமைந்துள்ள திரிவங்க அன்ட் சேனாநாயக்க ஒக்ஷனியர்ஸ் என்ற தலைப்பின், பெயரின் மற்றும் நிறுவனத்தின் கீழ் பங்கு வியாபாரத்தை நடாத்திச் செல்லும், லோகு பண்டா சேனாநாயக்க, மகுரு தெனியே வலவ்வே திரிவங்க சரித் சேனாநாயக்க மற்றும் குருகே சுமனாவதி சேனாநாயக்க அவர்கள் மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென, 1990 இல. 04 என்ற வங்கி

மூலம் பிரசுரிக்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கமைவாக கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### மேல் சொல்லப்பட்ட ஆதன இடாப்பு

1. தென் மாகாணம், காலி மாவட்டம், பெலவத்த இல. 123B என்ற கிராம சேவையாளர் பிரிவினுள் போபெ போத்தல பிரதேச செயலாளர் பிரிவில் காலி கடவத் சதரவினுள் மற்றும் போபெ போத்தல பிரதேச சபை எல்லையினுள் வடரெக (தற்பொழுது ஹபுகல) அமைந்துள்ள கோஹொபன்வத்த (பகுதி) மற்றும் வத்த அத்தரகும்புர என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. லோகுநாரங்கொட அவர்களால் 2004.11.07 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 174 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் B என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி (அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் என். ஜி. ஈ. டயஸ் அவர்களால் 1984.09.30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 2947 என்ற வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட லொட் B இல் மீண்டும் அளந்தவாறாக) எல்லையாக, வடக்கு : லொட் A; கிழக்கு : காலியில் இருந்து வக்வெல்ல வரையான பிரதான வீதி; தெற்கு :லொட் C மற்றும் மேற்கு : அந்தஹன் தோல மூலம், எல்லையாக மேற்குறித்த இல. 174 என்ற வரைபடத்தின் பிரகாரம் (00ஏ. 02றூ. 5.5பே) விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள், இலைகுலை, பயிர்ச்செய்கை மற்றும் அனைத்து சகலதும். இது காலி காணிப்பதிவுசெய்யும் காரியாலயத்தில் இருமடிப்புத்தாளில் R 70/130 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. மேற்குறித்த, வடரெக்க (தற்பொழுது ஹபுகல) அமைந்துள்ள கோஹொபன்வத்த (பகுதி) மற்றும் வத்த அத்தரகும்புர என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. லோகுநாரங்கொட அவர்களால் 2004.11.07 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 174 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் C என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி (அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் என். ஜி. ஈ. டயஸ் அவர்களால் 1984.09.30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 2947 என்ற வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட லொட் C இல் மீண்டும் அளந்தவாறாக) எல்லையாக, வடக்கு: லொட் B; கிழக்கு : காலியின் இருந்து வக்வெல்ல வரையான பிரதான வீதி; தெற்கு : இந்த காணிப்பகுதி மற்றும் மேற்கு: அந்தஹன் தோல மூலம், எல்லையாக மேற்குறித்த இல. 174 என்ற வரைபடத்தின் பிரகாரம் (01ஏ. 03றூ. 28.47பே) விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள், இலைகுலை, பயிர்ச்செய்கை மற்றும் அனைத்து சகலதும். இது காலி காணிப்பதிவுசெய்யும் காரியாலயத்தில் இருமடிப்புத்தாளில் R 70/131 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

2024.01.30

08-12

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆவது சிறப்பு சட்டப்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கிளை : காலி நகர கிளை
கடன் கணக்கு இலக்கம் : 2089749

(காலஞ்சென்ற கதலுவ லியனகே பந்துல அல்லது பந்துல கதலுவ லியனகே அவர்களின் காணி நிர்வாகம் செய்வதற்காக, நிர்வாகியாக காலி மாவட்ட நீதிமன்றத்தில் T/543 இலக்கமுடைய வழக்கில் நியமித்துள்ள கோவிந்த ரத்நாயக்க வாசல முதியன்சேலாகே நாமலி மெணிகே வீரகோன்)

O/A - கிரண்ட் காமன்ட்ஸ்

2024.01.30 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையின் கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காலி பிரசித்த நொத்தாரிசு கே. சி. விஜேநாராயண அவர்களால் 2011.07.01 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டு முறி இல. 3688, காலி பிரசித்த நொத்தாரிசு பி. எஸ். எல் த சில்வா அவர்களால் 2015.08.21 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டு முறி இல. 033 மற்றும் 2015.08.21 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட மேலதிக ஈட்டு முறி இல. 034 என்ற ஈட்டுமுறியின் மூலம், ஏனைய காரணங்களோடு, கீழே ஆதனஇடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட காணி மற்றும் வளாகம் அடகுவைக்கப்பட்டுள்ளதோடு, "கிரண்ட் காமன்ட்ஸ்" என்ற பெயரின், தலைப்பின் மற்றும் நிறுவனத்தின் கீழ் தனி உரிமையாளராக வியாபாரத்தை நடாத்திச் செல்லும், காலி, வெக்வெல்ல, "காமினி விலா" வில் கதலுவ லியனகே பந்துல அல்லது பந்துல கதலுவ லியனகே (தற்பொழுது காலஞ்சென்ற) கடனாளியாகவும் மற்றும் மேற்குறித்த வசதிகளோடு மீளச்செலுத்துவதற்காக பிணையாக, கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீயின் பெயருக்கு எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட மேற்குறித்த ஈட்டு முறி இல. 3688, 033 மற்றும் மேலதிக ஈட்டு முறி இல. 034 மீது பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தொகை செலுத்துவதற்கு, மேற்குறித்த காலஞ்சென்ற கதலுவ லியனகே பந்துல அல்லது பந்துல கதலுவ லியனகே மற்றும்/ அல்லது கோவிந்த ரத்நாயக்க வாசல முதியன்சேலாகே நாமலி மெணிகே வீரகோன் மேற்குறித்த நிர்வாகியாக புறக்கணித்துள்ளதாலும்,

மற்றும் மேற்குறித்த ஈட்டுமுறியின் கீழ், மறுசீரமைக்கப்பட்ட நீண்டகால கடன் இல. 2089749 சம்பந்தமாக ஏனைய காரணங்களோடு, அமெரிக்க டொலர் ஆறு இலட்சத்து

ஒன்பதாயிரத்து ஐம்பத்து நான்கு தசம் இருபத்து மூன்று (அமெரிக்க டொலர் 609,054.23) முழுத்தொகையை அல்லது அதற்கு சமமான ஸ்ரீ லங்கா ரூபாய்களின் பணத்தை 2023, நவெம்பர் 17 ஆந் திகதி வரை முற்பணத்தோடு மற்றும் வட்டியோடும், கொமர்ஷல் பாங்க் ஓப் சிலோன் பீஎல்சீக்கு தற்பொழுது அறவிடப்படவேண்டிய மற்றும் பெற்றுக்கொள்ள வேண்டிய, மேற்குறித்த அமெரிக்க டொலர் ஆறு இலட்சத்து ஒன்பதாயிரத்து ஐம்பத்து நான்கு தசம் இருபத்து மூன்று (அமெரிக்க டொலர் 609,054.23) பணத்தொகை மற்றும் அதற்கு சமமான ஸ்ரீ லங்கா ரூபாய்களின் பணத்தொகை அறவிடுவதற்காக மற்றும் 2023, நவெம்பர் 18 ஆந் திகதி முதல் விற்பனை திகதி வரை காலத்திற்கு மேற்குறித்த மறுசீரமைக்கப்பட்ட நீண்டகால கடன் இல. 2089749 மீது, அமெரிக்க டொலர் 373,158.90 தொகையை, மிகுதி முற்பணத்தின் மீது வருடத்திற்கு அமெரிக்க டொலர் LIBOR மதிப்பு + 6.00% வீதம் (2023.11.17 ஆந் திகதியாகும் பொழுது வருடத்திற்கு 11.5167 வீதம்) மேலதிக வட்டியோடும், பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவு மற்றும் ஏனைய கட்டணங்களோடு உள்ளடங்களாக, தற்பொழுது பெற்றுக் கொள்ளும் பணத்தோடும் சேர்த்து கழித்து, மேற்குறித்த ஈட்டுமுறி இல. 3688, 33 மற்றும் மேலதிக ஈட்டு முறி இல. 34 என்ற ஈட்டுமுறியின் மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு அடகு வைக்கப்பட்டுள்ளதோடு, கீழே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட விபரத்தோடு, காணி மற்றும் வளாகம், மஹரகம, கடுவாவல வீதி, இல. 30/83 என்ற விலாசத்தில் அத்தோடு கொழும்பு 08, பொரல்ல, சுப்பர் மார்கட் கட்டிடத்தொகுதி, 1 ஆவது மாடி, இல. 7/1/10 என்ற இடத்தில் அமைந்துள்ள திரிவங்க அன்ட் சேனாநாயக்க ஒக்ஷனியர்ஸ் என்ற தலைப்பின், பெயரின் மற்றும் நிறுவனத்தின் கீழ் பங்கு வியாபாரத்தை நடாத்திச் செல்லும், லோகு பண்டா சேனாநாயக்க, மகுரு தேனியே வலவ்வே திரிவங்க சரித் சேனாநாயக்க மற்றும் குருகே சுமனாவதி சேனாநாயக்க அவர்கள் மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென, 1990 இல. 04 என்ற வங்கி மூலம் பிரசுரிக்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கமைவாக கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### மேல் சொல்லப்பட்ட ஆதன இடாப்பு

1. தென் மாகாணம், காலி மாவட்டம், பெலவத்த இல. 123B என்ற கிராம சேவையாளர் பிரிவினுள் போபெ போத்தல பிரதேச செயலாளர் பிரிவில் காலி கடவத் சதரவினுள் மற்றும் போபெ போத்தல பிரதேச சபை எல்லையினுள் வடரெக (தற்பொழுது ஹபுகல) அமைந்துள்ள கோஹொபன்வத்த (பகுதி) மற்றும் வத்த அத்தரகும்புர என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. லோகுநாரங்கொட அவர்களால் 2004.11.07 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 174 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் B என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி (அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் என். ஜி. ஈ. டயஸ் அவர்களால் 1984.09.30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 2947 என்ற வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட லொட் B இல் மீண்டும் அளந்தவாறாக) எல்லையாக, வடக்கு : லொட் A; கிழக்கு : காலியில் இருந்து வக்வெல்ல வரையான பிரதான வீதி; தெற்கு :லொட் C மற்றும் மேற்கு : அந்தஹன் தோல மூலம், எல்லையாக மேற்குறித்த இல. 174 என்ற வரைபடத்தின் பிரகாரம் (00ஏ. 02றூ. 5.5பே) விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள், இலைகுலை, பயிர்ச்செய்கை மற்றும் அனைத்து சகலதும். இது காலி காணிப்பதிவுசெய்யும் காரியாலயத்தில் இருமடிப்புத்தாளில் R 70/130 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. மேற்குறித்த, வடரெக்க (தற்பொழுது ஹபுகல) அமைந்துள்ள கோஹொபன்வத்த (பகுதி) மற்றும் வத்த அத்தரகும்புர என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. லோகுநாரங்கொட அவர்களால் 2004.11.07 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 174 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் C என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி (அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் என். ஜி. ஈ. டயஸ் அவர்களால் 1984.09.30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 2947 என்ற வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட லொட் C இல் மீண்டும் அளந்தவாறாக) எல்லையாக, வடக்கு: லொட் B; கிழக்கு : காலியில் இருந்து வக்வெல்ல வரையான பிரதான வீதி; தெற்கு : இந்த காணிப்பகுதி மற்றும் மேற்கு: அந்தஹன் தோல மூலம், எல்லையாக மேற்குறித்த இல. 174 என்ற வரைபடத்தின் பிரகாரம் (01ஏ. 03றூ. 28.47பே) விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள், இலைகுலை, பயிர்செய்கை மற்றும் அனைத்து சகலதும். இது காலி காணிப்பதிவுசெய்யும் காரியாலயத்தில் இருமடிப்புத்தாளில் R 70/131 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

2024.01.30

08-13

---

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்படுகின்ற கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி எனக்குறிப்பீடு செய்யப்படுகின்ற) யூனியன் பேங்க் ஓப் கழம்பு பீஎல்சீ பணிப்பாளர் சபையால் 2025, யூலை 07 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, ரிங் வீதி 1, ஏற்றுமதி செயன்முறை வலயம், கடுநாயக்க என்ற முகவரியில் (கம்பனிப் பதிவிலக்கம் பீவீ 14930) பதிவு

அலுவலகத்தைக் கொண்ட ஷோ டு ஷோ பிரைவேட் லிமிட்டெட் (இதனகத்துப் பின்னர் "கடப்பாடுடையவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) நிறுவனம் (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி என அழைக்கப்படுகின்ற) PB676PQ கம்பனிப் பதிவிலக்கத்தையுடைய இல. 64 காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரியைச் சேர்ந்த யூனியன் பேங்க் ஒப் கழம்பு பீஎல்சீ வங்கியிலிருந்து மீள் - திட்டமிடப்பட்ட தவணைக் கடன் வசதிகளைப் பெற்றுக் கொண்டிருப்பதாலும் மற்றும் சொல்லப்பட்ட கடப்பாடுடையவர் மற்றும் இல. 144/3, பிகரிங்ஸ் வீதி, கொழும்பு 13 என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டு எக்ஸ்போ புரொபர்டி டெவலொபர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (கம்பனிப் பதிவிலக்கம் பீவீ 774) ("ஈடுவைத்தவர்") இரண்டும் பிரசித்த நொத்தாரிசு எல். ஜீ. என். சாரங்கி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 770,000.00 தொகைக்கான 2018.06.01 ஆந் திகதியுடைய 740 ஆம் இலக்க நிலவுகின்ற முதன்மை மிதக்கும் ஈட்டுமுறி மற்றும் 2024.11.04 ஆந் திகதியுடைய 1423 ஆம் இலக்க மேலதிக பிணைப்பொறுப்பு மிதக்கும் ஈட்டுமுறியையும், மற்றும் சகலதும் பிரசித்த நொத்தாரிசு ஐ. கருணாநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 255,000.00 தொகைக்காக 2019.10.11 ஆந் திகதியிட்ட 1276 ஆம் இலக்க மேலதிக ஈட்டுமுறி, ஐ. அ. டொ. 150,000.00 பெறுமதிக்காக 2013.08.26 ஆந் திகதியிட்ட 763 ஆம் இலக்க நிலவுகின்ற முதன்மை ஈட்டுமுறி, ஐ. அ. டொ. 49,000.00 பெறுமதிக்காக 2019.10.11 ஆந் திகதியிட்ட 1278 ஆம் இலக்க மேலதிக ஈட்டுமுறி, ஐ. அ. டொ. 33,450.00 பெறுமதிக்காக 2013.08.26 ஆந் திகதியிட்ட 764 ஆம் இலக்க நிலவுகின்ற முதன்மை மிதக்கும் முதன்மை ஈட்டுமுறி மற்றும் ஐ. அ. டொ. 81,000.00 பெறுமதிக்காக 2019.10.11 ஆந் திகதியிட்ட 1277 ஆம் இலக்க மேலதிக ஈட்டுமுறி என்பவற்றை வழங்கி/ நிறைவேற்றி சொல்லப்பட்ட கடன் வசதிகள் காரணமாக யூனியன் வங்கிக்கு வருமதியாகவுள்ள ஐக்கிய அமெரிக்க டொலர் பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றைந்தாயிரத்து முந்நூற்று இருபத்தொன்பது தசம் பூச்சியம் நான்கு (ஐ. அ. டொ. 1,995,329.04) தொகையையும் மற்றும் அதன்மீதான வட்டியையும் திருப்பிச் செலுத்துவதற்குப் பொதுப் பிணைப்பொறுப்பாக இதன் முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் அட்டவணைகளில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை ஈடுவைத்து அடமானம் செய்திருக்கின்றனர்.

அத்தோடு சொல்லப்பட்ட கடன் வசதிகள் மீது 2025.04.09 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவையாக உள்ள ஐக்கிய அமெரிக்க டொலர் பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றைந்தாயிரத்து முந்நூற்று இருபத்தொன்பது தசம் பூச்சியம் நான்கு (ஐ.அ.டொ 1,995,329.04) தொகை மற்றும் சொல்லப்பட்ட மூலதன நிலுவையாக உள்ள ஐக்கிய அமெரிக்க டொலர் பத்தொன்பது இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று எழுபத்து நான்கு தசம் ஒன்பது ஐந்து (ஐ.அ.டொ. 1,949,874.95) தொகை மீது 2025.04.10 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை 3 மாத எஸ்ஓஎப்ஆர் (SOFR) + 4% வருடத்துக்கு + 2 வருடத்துக்கு வீதத்தில் மேலதிக வட்டியும் யூனியன் வங்கிக்கு சொல்லப்பட்ட கடப்பாடுடையவர்/ ஈடுவைத்தவரிடமிருந்து வருமதியாகவும் மற்றும் சேர வேண்டியதாகவும் உள்ளது.

யூனியன் வங்கியின் பணிப்பாளர் சபை 2023.12.05 ஆந் திகதியிட்ட ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளதால், அது இதன் மூலம் திரும்பப் பெறப்படுகின்றது.

யூனியன் வங்கிப் பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ், சொல்லப்பட்ட பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் செயல்படுவதனாலும், சொல்லப்பட்ட கடப்பாடுடையவர் மற்றும் ஈடுவைத்தவர் மேற்குறித்த கடன் நிலுவைகளை அல்லது அவற்றின் பகுதிகளை கொடுத்துத் தீர்ப்பதில் தவணை தவறியுள்ளனர் எனத் திருப்திப்பட்டுள்ளதனாலும், சொல்லப்பட்ட கடன் வசதிகள் மீது 2025.04.09 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாகவுள்ள ஐக்கிய அமெரிக்க டொலர் பத்தொண்பது இலட்சத்து தொண்ணூற்றைந்தாயிரத்து முந்நூற்று இருபத்தொன்பது தசம் பூச்சியம் நான்கு (ஐஅடொ 1,995,329.04) தொகையையும் மற்றும் சொல்லப்பட்ட மூலதன நிலுவைத் தொகை மீது 2024.04.10 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை சொல்லப்பட்ட நிதி வசதிகள் மீது மேலே குறிப்பிட்ட வட்டியையும் மற்றும் சொல்லப்பட்ட 740, 763, 764, 1276, 1277, 1278 மற்றும் 1423 ஆம் இலக்க முதன்மை ஈட்டுமுறிகளின் நியதிகளின் கீழும் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரமும் யூனியன் வங்கிக்கு மீட்டுக்கொள்வதற்கு உரித்துடைய அனைத்து ஏனைய தொகைகளையும் (எவையேனும் தொகைகள்) கிடைக்கப்பெற்றிருந்தால் அவற்றைக் கழித்து எஞ்சிய தொகையை மீட்டுக்கொள்வதற்காக, பிரசித்த நொத்தாரிசு எல். ஜீ. என். சாரங்கி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 740 ஆம் இலக்க முதன்மை ஈட்டுமுறி மற்றும் 1423 ஆம் இலக்க மேலதிக ஈட்டுமுறி, மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஐ. கருனாநாயக என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 763, 764, 1276, 1277 மற்றும் 1278 இலக்கங்களைக் கொண்ட ஈட்டுமுறிகள் என்பவற்றின் கீழ் மற்றும் அவற்றின் பயனால் யூனியன் வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ள இதன் முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் அட்டவணைகளில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட ஆதனங்களை சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் நியதிகளினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளராகிய சந்திம பீ. கமகே ஒக்ஷனியர்ஸ் நிறுவனத்திற்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிப்பதற்கு இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

### மேலே குறிப்பீடு செய்யப்பட்ட முதலாம் அட்டவணை (ஈட்டு முறிகள் 740 மற்றும் 1276)

கொழும்பு காணிப்பதிவகத்தில் Con SD 07/04, Con SD 07/06, 20 இருமடியிலக்கங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டு தற்போது Con SD 07/03, 05, 19 பிரிவு/ இருமடியிலக்கங்களின் கீழ் முன்கொண்டு வரப்பட்டுள்ளது.

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிடி கோரளை பல்லே பற்று, கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கினிடுபிடிய கிராம சேவகர் பிரிவில், கொடஹேன கினிடுபிடிய வட்டார இல. 10, நியூ செட்டி தெருவில் அமைந்துள்ள உரிமம் பெற்ற

நில அளவையாளர் எஸ். கிருஷ்ணப்பிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்ட, 2017, மே 12 ஆந் திகதியிடப்பட்ட, 4203 ஆம் இலக்க கூட்டாட்சி வரைபடத்தில் புதிய செட்டி தெரு, கொழும்பு 12 இல் உள்ள வரி மதிப்பீட்டு இல. 132 ஐக் கொண்ட தரை தளத்தில் துண்டு இல. CPFOP1 ஐக் கொண்ட ஒரு அலுவலகப் பகுதி.

CPF0P1 என்ற துண்டு இலக்கத்தைக் கொண்ட மேற்கூறிய அலுவலகப் பகுதிக்கு எல்லைகள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

வடக்கு: புதுச் செட்டி தெரு, வரி மதிப்பீட்டு இலக்கங்கள் 140, 140/10 மற்றும் 140/11 ஐக் கொண்ட ஆதனங்களைப் பிரிக்கின்ற இந்தக் கூட்டாட்சி துண்டத்தின் சுவரின் மத்தி, இந்தக் கூட்டாட்சித் துண்டம் மற்றும் CE9(SW), CE10 (Lift), CE2, CE3, CE11 (SW), CE12 (Lift) மற்றும் CE4 ஆகியவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

கிழக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CE5, CE13, CE14, CE16 மற்றும் CE15 க்கு என்பவற்றுக்கிடையிலான சுவரின் மத்தி;

தெற்கு: இந்த கூட்டாட்சித் துண்டம் மற்றும் CE14, CE6, CE7, CE8 என்பவற்றுக்கிடையிலான சுவரின் மத்தி மற்றும் புதுச் செட்டி தெரு, வரி மதிப்பீட்டு இலக்கம் 128 ஐக்கொண்ட வளவைப் பிரிக்கின்ற இந்த கூட்டாட்சி துண்டத்தின் சுவரின் மத்தி;

மேற்கு: இந்த கூட்டாட்சித் துண்டம் மற்றும் CE17 மற்றும் CE18 ற்கும் இடையிலான சுவரின் மத்தி.

கீழ் : நில மட்ட தளம்

மேல் : மேலே CPF1P1 இன் கொங்கிரீட் தளத்தின் மத்தி

ஐந்நூற்று முப்பத்தொன்பது தசம் ஏழு ஏழு சதுர மீட்டர் (539.77 மீட்டர்) அல்லது ஐயாயிரத்து எண்ணூற்று பத்து சதுர அடி (5,810 சதுர அடி) தரைப் பரப்பளவைக் கொண்டுள்ளது.

உடனடி பொதுவான பகுதி CE17

2. மேல் மாகாணம் கொழும்பு மாவட்டத்தில், சல்பிடி கோரளை பல்லே பற்று, கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கினிடுபிடிய கிராம சேவகர் பிரிவில், கொடஹேன கினிடுபிடிய வட்டார இல. 10, நியூ செட்டி தெருவில் அமைந்துள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். கிருஷ்ணப்பிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்ட, 2017, மே 12 ஆந் திகதியிடப்பட்ட, 4203 ஆம் இலக்க கூட்டாட்சி வரைபடத்தில் புதிய செட்டி தெரு, கொழும்பு 12 இல் உள்ள வரி மதிப்பீட்டு இல. 132M/1 ஐக் கொண்ட இடை மாடியில் (Mezzanine Floor) துண்டு இல. CPFMP1 ஐக் கொண்ட ஒரு கடை.

CPFMP1 என்ற துண்டு இலக்கத்தைக் கொண்ட மேற்கூறிய கடைக்கு எல்லைகள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

வடக்கு: புதுச் செட்டித் தெருவில் வரி மதிப்பீட்டு இலக்கங்கள் 140, 140/10 மற்றும் 140/11 ஆகிய வளவுகளை பிரிக்கின்ற இந்தக் கூட்டாட்சி துண்டத்தின் சுவரின் மத்தி;

கிழக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CPFMP2 இற்கு இடையேயான சுவரின் மத்தி;

தெற்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CE25 இற்கு இடையேயான சுவரின் மத்தி;

மேற்கு: இந்த கூட்டாட்சித் துண்டம் மற்றும் CE9(SW) இற்கு இடையேயான சுவரின் மத்தி.

கீழ் : நில மட்ட தளம்

மேல் : மேலே CPF1P1 மற்றும் CE15 என்பவற்றின் கொங்கிரீட் தளத்தின் மத்தி

பன்னிரெண்டு தசம் ஐந்து நான்கு சதுர மீட்டர் (12.54 சதுர மீட்டர்) அல்லது நூற்று முப்பத்தைந்து சதுர அடி (135 சதுர அடி) தரைப் பரப்பளவைக் கொண்டுள்ளது.

பொது மூலகங்களில் பிரிவிடப்படாத 0.031% சதவீதப் பெறுமதியான பங்கொன்று.

உடனடி பொதுவான பகுதி CE25

3. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிடி கோரளை பல்லே பற்று, கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கினிடுபிடிய கிராம சேவகர் பிரிவில், கொடஹேன கினிடுபிடிய வட்டார இல. 10, நியூ செட்டி தெருவில் அமைந்துள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். கிருஷ்ணப்பிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்ட, 2017, மே 12 ஆந் திகதியிடப்பட்ட, 4203 ஆம் இலக்க கூட்டாட்சி வரைபடத்தில் புதிய செட்டி தெரு, கொழும்பு 12 இல் உள்ள வரி மதிப்பீட்டு இல. 132M/8 ஐக் கொண்ட இடை மாடியில் (Mezzanine Floor) துண்டு இல. CPFMP8 ஐக் கொண்ட ஒரு கடை.

CPFMP8 என்ற துண்டு இலக்கத்தைக் கொண்ட மேற்கூறிய கடைக்கு எல்லைகள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

வடக்கு: புதுச் செட்டித் தெருவில் உள்ள வரி மதிப்பீட்டு இலக்கங்கள் 140, 140/10 மற்றும் 140/11 ஆகிய வளவுகளை பிரிக்கின்ற இந்தக் கூட்டாட்சி துண்டத்தின் சுவரின் மத்தி;

கிழக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CE9(SW) மற்றும் CE25 இற்கு இடையேயான சுவரின் மத்தி;

தெற்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CE25 இற்கு இடையேயான சுவரின் மத்தி;

மேற்கு: இந்த கூட்டாட்சித் துண்டம் மற்றும் CPFMP7 மற்றும் CE22 இற்கு இடையேயான சுவரின் மத்தி.

கீழ் : நில மட்ட தளம்

மேல் : CPF1P10 இன் கொங்கிரீட் தளத்தின் மத்தி

பன்னிரெண்டு தசம் ஆறு மூன்று சதுர மீட்டர் (12.63 சதுர மீட்டர்) அல்லது நூற்று முப்பத்தாறு சதுர அடி (136 சதுர அடி) தரைப் பரப்பளவைக் கொண்டுள்ளது.

பொது மூலகங்களில் பிரிவிடப்படாத 0.031% சதவீதப் பெறுமதியான பங்கொன்று.

உடனடி பொதுவான பகுதி CE24

பொது மூலகங்கள் உட்பட்டது

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட இரண்டாம் அட்டவணை**
**(ஈட்டு முறிகள் இல. 763 மற்றும் 1278)**

கொழும்பு காணிப்பதிவகத்தில் Con D 06/92, Con D 6/112, பிரிவு/ இருமடியிலக்கங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூட்டாட்சி துண்டம் FOP1

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், வட்டார இல. 24 கிராம சேவகர் பிரிவில், வட்டார இல. 24, பார்க் வீதி வரிமதிப்பீட்டிலக்கம் 68 ஐக்கொண்ட உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். கிருஷ்ணப்பிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்ட, 2007, மே 04 தேதியிட்ட, 2218 ஆம் இலக்க கூட்டாட்சி வரைபடத்தில் கூட்டாட்சி துண்டு இல. FOP1 ஐக் கொண்ட ஒரு துண்டம். அத்தோடு பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது.

வடக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் CE17 மற்றும் CE11 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

கிழக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CE11 மற்றும் CE19 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

தெற்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CE19, CE20, CE21 மற்றும் CE17 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

மேற்கு: இந்த கூட்டாட்சித் துண்டம் மற்றும் CE19, CE20, CE21 மற்றும் CE17 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி.

கீழ் : மேலே CE1 இற்கு மேல் உள்ள இந்த கூட்டாட்சி துண்டத்தின் கொங்கிரீட் தளத்தின் மத்தி

மேல் : மேலே M1P1 கூட்டாட்சி துண்டத்தின் கொங்கிரீட் தளத்தின் மத்தி

தொண்ணூற்றாறு தசம் ஒன்று ஐந்து சதுர மீட்டர் (96.15 சதுர மீட்டர்) அல்லது ஆயிரத்து முப்பத்தைந்து சதுர அடி (1035 சதுர அடி) தரைப் பரப்பளவைக் கொண்டுள்ளது.

சொல்லப்பட்ட கூட்டாட்சித் துண்டம் FOP1 ஒரு வணிகப் பகுதியாகும்.

கூட்டாட்சி ஆதனத்தின் பொது மூலகங்களில் கூட்டாட்சித் துண்டம் FOP1இற்கான பிரிவிடப்படாத 1.686% சதவீதப் பெறுமதியான பங்கொன்று.

கூட்டாட்சித் துண்டம் FOP1 இற்கு அணுகக்கூடிய உடனடுத்த பொதுப் பிரதேசம் CE11 ஆகும்.

அத்தோடு 4 ஆம் பக்கத்தில் 32 என அடையாளமிடப்பட்ட வாகனத் தரிப்பிடத் துண்டத்துடன் கூடியது.
கொழும்பு காணிப் பதிவகத்தில் Con A173/75 பிரிவு/ இருமடியிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

பொது மூலகங்கள் உட்பட்டது.

பின்வரும் காணியின் மேலாலும் மற்றும் அதன் வழியேயுமான பாதை உரித்துக்கு உட்பட்டது.

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், சுதுவெல்ல என்ற இடத்தில், வட்டார இல. 24, பார்க் வீதி வரிமதிப்பீட்டிலக்கம் 66 மற்றும் 66A என்பவற்றைக் கொண்ட (உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. எப். சமீர் என்பவரால் தயாரிக்கப்பட்ட, 1980, மே 10 ஆந் திகதியிட்ட, 2305 ஆம் இலக்க வரைபடத்தில் சித்தரிக்கப்பட்ட துண்டம், இன் ஒரு மீள் அளவீடாக இருக்கின்ற துண்டம் 1, உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். கே. மஹிந்த என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000, யூலை 12 ஆந் திகதியுடைய 819 ஆம் இலக்க வரைபடத்தில் சித்தரிக்கப்பட்ட துண்டம் 1 இன் ஒரு மீள் அளவீடாகவும் மற்றும் உப - பிரிவுகளாகவும் இருக்கின்ற உரிமம் பெற்ற நில அளவையாளர் எல். டீ. மாதொல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, ஏப்பிறல் 20 ஆந் திகதியிட்ட 2003/99 ஆம் இலக்க வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு ஒரு பாதை ரேகையாக இருக்கின்ற துண்டம் "01B" என சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதோடு சொல்லப்பட்ட 2003/99 ஆம் இலக்க வரைபடத்திற்கு ஏற்ப, சொல்லப்பட்ட துண்டம் "1B" பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது. வடக்கு: டப்ளியூ. ஏ. டீ. ராமநாயக மாவத்தை; கிழக்கு: பார்க் வீதி; தெற்கு: துண்டம் 1A மற்றும் மேற்கு: துண்டம் 1A ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணி பூச்சியம் தசம் மூன்று ஆறு பேர்ச் (00ஏ. 00றூ. 0.36பே) விஸ்தீரணத்தைக் கொண்டு கொழும்பு காணிப்பதிவகத்தில் A956/228 பிரிவு/ இருமடியிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு தற்போது A1160/54 பிரிவு/ இருமடியிலக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட மூன்றாம் அட்டவணை**
**(ஈட்டு முறிகள் இல. 764 மற்றும் 1277)**

கொழும்பு காணிப்பதிவகத்தில் Con A 173/77, Con D 07/63, பிரிவு/ இருமடியிலக்கங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டு, Con D 07/63 பிரிவு/ இருமடியிலக்கத்தின் கீழ் முன்கொண்டு வரப்பட்டுள்ளது.

(அ) மேல் மாகாணம் கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், கொழும்பு - மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில், வட்டார இல. 24 கிராம சேவகர் பிரிவில், பார்க் வீதி வரிமதிப்பீட்டிலக்கம் 66 M/1 பார்க் வீதி, கொழும்பு 02 சுதுவெல்ல என்ற இடத்தில் அமைந்துள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். கிருஷ்ணப்பிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்ட, 2007, மே 04 ஆந் திகதியிடப்பட்ட, 2218 ஆம் இலக்க கூட்டாட்சி வரைபடத்தில் கூட்டாட்சி துண்டு இல. M1P1 ஐக் கொண்ட ஒரு துண்டம். அதில் அலுவலகம் ஒன்றும் மூன்று மலசல கூடங்களும் மற்றும் பல்கனி பிரதேசத்தையும் கொண்டு பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது.

வடக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CE4, CE23, CE20, CE10 மற்றும் CE11 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

கிழக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CE11, CE22, CE12 மற்றும் ACP-0 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

தெற்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CE22, CE12, ACP-0 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

மேற்கு: இந்த கூட்டாட்சித் துண்டம் மற்றும் ACP-0, CE4, CE23, CE20 மற்றும் CE10 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி.

கீழ் : மேலே CE14, CE15, CPFOP1 மற்றும் CE19 இற்கு மேல் உள்ள இந்த கூட்டாட்சி துண்டத்தின் கொங்கிரீட் தளத்தின் மத்தி

மேல் : இந்த கூட்டாட்சி துண்டம் F1P1 (பகுதி) மற்றும் மேலே F1P2 இன் கொங்கிரீட் தளத்தின் மத்தி

இருநூற்றாறு தசம் ஒன்று ஐந்து சதுர மீட்டர் (206.15 சதுர மீட்டர்) அல்லது இரண்டாயிரத்து இருநூற்று பத்தொன்பது சதுர அடி (2,219 சதுர அடி) பரப்பளவைக் கொண்டுள்ளது.

(ஆ) இடை மாடியில் (Mezzanine Floor) (பல்கனி) துணை கூட்டாட்சி துண்டம் ACP - 0.
சொல்லப்பட்ட கூட்டாட்சி துண்டத்தின் எல்லைகள் :

வடக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CPM1P1 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

கிழக்கு: இந்த துணை கூட்டாட்சி துண்டம் மற்றும் CPM1P1 மற்றும் CE12 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

தெற்கு: இந்த துணை கூட்டாட்சி துண்டம் மற்றும் CE12 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

மேற்கு: இந்த துணை கூட்டாட்சித் துண்டம் மற்றும் CPM1P1 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி.

கீழ் : இந்த துணை கூட்டாட்சி துண்டத்தின் மேலே CE12 மற்றும் CE15 என்பவற்றின் கொங்கிரீட் தரை தளத்தின் மத்தி

மேல் : மேலே ACP - 2 இன் கொங்கிரீட் தரை தளத்தின் மத்தி

ஏழு தசம் ஒன்பது ஒன்பது சதுர மீட்டர் (7.99 சதுர மீட்டர்) அல்லது எண்பத்தாறு சதுர அடி (86 சதுர அடி) பரப்பளவைக் கொண்டுள்ளது.

கூட்டாட்சி துண்டு இலக்கம் M1P1 மற்றும் துணை கூட்டாட்சித் துண்டம் ACP - 0 ஆகியவற்றின் மொத்த பரப்பளவு இருநூற்றி பதினான்கு தசம் ஒன்று நான்கு சதுர மீட்டர்கள் (214.14 சதுர மீ.) அல்லது 2,305 சதுர அடிகள் ஆகும்.

கூட்டாட்சி ஆதனத்தின் பொது மூலகங்களில் கூட்டாட்சித் துண்டம் M1P1 இற்கான பிரிவிடப்படாத 3.74% சதவீதப் பெறுமதியான பங்கொன்று.

கூட்டாட்சி துண்டம் M1P1இற்கான உடனடுத்த அணுகல் பொதுப் பிரதேசம் CE23 ஆகும்.

பொது மூலகங்கள் உட்பட்டது.

பின்வரும் காணியின் மேலாலும் மற்றும் அதன் வழியேயுமான பாதை உரித்துக்கு உட்பட்டது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், சுதுவெல்ல என்ற இடத்தில், வட்டார இல. 24, பார்க் வீதி வரிமதிப்பீட்டிலக்கம் 66 மற்றும் 66A என்பவற்றைக் கொண்ட (உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. எப். சமீர் என்பவரால் தயாரிக்கப்பட்ட, 1980, மே 10 ஆந் திகதியிடப்பட்ட, 2305 ஆம் இலக்க வரைபடத்தில் சித்தரிக்கப்பட்ட துண்டம் 1 இன் ஒரு மீள் அளவீடாக இருக்கின்ற துண்டம் 1) உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். கே. மஹிந்த என்பவரால் தயாரிக்கப்பட்ட, 2000, யூலை 12 ஆந் திகதியுடைய 819 ஆம் இலக்க வரைபடத்தில் சித்தரிக்கப்பட்ட துண்டம் 1 இன் ஒரு மீள் அளவீடாகவும் மற்றும் உப- பிரிவுகளாகவும் இருக்கின்ற உரிமம் பெற்ற நில அளவையாளர் எல். டீ. மாதொல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, ஏப்பிறல் 20 ஆந் திகதியிடப்பட்ட 2003/99 ஆம் இலக்க வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு ஒரு பாதை ரேகையாக இருக்கின்ற துண்டம் "01B" என சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதோடு சொல்லப்பட்ட 2003/99 ஆம் இலக்க வரைபடத்திற்கு ஏற்ப, சொல்லப்பட்ட துண்டம் "1B" பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது. வடக்கு: டப்ளியூ. ஏ. டீ. ராமநாயக மாவத்தை; கிழக்கு: பார்க் வீதி; தெற்கு: துண்டம் 1A மற்றும் மேற்கு: துண்டம் 1A ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணி பூச்சியம் தசம் மூன்று ஆறு பேர்ச் (00ஏ. 00றூ. 0.36பே) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது கொழும்பு காணிப்பதிவகத்தில் A956/228 பிரிவு/ இருமடியிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

D46/113 பிரிவு/ இருமடியிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட நான்காம் அட்டவணை**
**(ஈட்டு முறி இல. 1423)**

கொழும்புகாணிப்பதிவகத்தில்ConSD 07/08,10,12,14,16,18, பிரிவு/ இருமடியிலக்கங்கள் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(1) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிடி கோரளை பல்லே பற்று, கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், கின்டுபிடிய கிராம சேவகர் பிரிவில், கொடஹேன கின்டுபிடிய வட்டார இல. 10 இல், கொழும்பு 12, புதுச் செட்டித்தெருவில் அமைந்துள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். கிருஷ்ணப்பிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்ட, 2017, மே 12 ஆந் திகதியிடப்பட்ட, 4203 ஆம் இலக்க கூட்டாட்சி வரைபடத்தில், வரிமதிப்பீட்டிலக்கம் 132 M/2, புதுச்செட்டித்தெரு கொழும்பு 12, இடை மாடியில் (Mezzanine Floor) கூட்டாட்சி துண்டு இல. CPFMP2 ஐக் கொண்ட ஒரு கடை.

துண்டு இல. CPFMP2 ஐக் கொண்ட கடை பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது.

வடக்கு: புதுச் செட்டித் தெருவில் உள்ள வரி மதிப்பீட்டு இலக்கங்கள் 140, 140/10 மற்றும் 140/11 ஆகிய வளவுகளை பிரிக்கின்ற இந்தக் கூட்டாட்சி துண்டத்தின் சுவரின் மத்தி;

கிழக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CPFMP3 இற்கு இடையேயான சுவரின் மத்தி;

தெற்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CE25 இற்கு இடையேயான சுவரின் மத்தி;

மேற்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CPFMP1 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

கீழ் : நில மட்ட தளம்

மேல் : மேலே CPF1P1 இன் கொங்கிரீட் தளத்தின் மத்தி

பதினாறு தசம் பூச்சியம் ஏழு சதுர மீட்டர் (16.07 சதுர மீட்டர்) அல்லது நூற்று எழுபத்து மூன்று சதுர அடி (173 சதுர அடி) தரைப் பரப்பளவைக் கொண்டுள்ளது.

பொது மூலகங்களில் பிரிவிடப்படாத 0.040% சதவீதப் பெறுமதியான பங்கொன்று.

உடனடி பொதுவான பிரதேசம் CE25

(2) மேலே சொல்லப்பட்டவாறு கொழும்பு 12, புதுச் செட்டித்தெருவில் அமைந்துள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். கிருஷ்ணப்பிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்ட, 2017, மே 12 ஆந் திகதியிடப்பட்ட, 4203 ஆம் இலக்க கூட்டாட்சி வரைபடத்தில், வரிமதிப்பீட்டிலக்கம் 132 M/3, புதுச்செட்டித்தெரு கொழும்பு 12, இடை மாடியில் (Mezzanine Floor) துண்டு இல. CPFMP3 ஐக் கொண்ட ஒரு கடை.

துண்டு இல. CPFMP3 ஐக் கொண்ட கடை பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது.

வடக்கு: புதுச் செட்டித் தெருவில் உள்ள வரி மதிப்பீட்டு இலக்கங்கள் 140, 140/10 மற்றும் 140/11 ஆகிய வளவுகளை பிரிக்கின்ற இந்தக் கூட்டாட்சி துண்டத்தின் சுவரின் மத்தி;

கிழக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CE2, CE3 மற்றும் CE25 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

தெற்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CE25 இற்கு இடையேயான சுவரின் மத்தி;

மேற்கு: இந்தக் கூட்டாட்சி துண்டம் மற்றும் CPFMP2 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

கீழ் : நில மட்ட தளம்

மேல் : மேலே CPF1P1 இன் கொங்கிரீட் தளத்தின் மத்தி

பதினேழு தசம் பூச்சியம் ஒன்பது சதுர மீட்டர் (17.09 சதுர மீட்டர்) அல்லது நூற்று எண்பத்து நான்கு சதுர அடி (184 சதுர அடி) தரைப் பரப்பளவைக் கொண்டுள்ளது.

பொது மூலகங்களில் பிரிவிடப்படாத 0.042% சதவீதப் பெறுமதியான பங்கொன்று.

உடனடி பொதுவான பிரதேசம் CE25

(3) மேலே சொல்லப்பட்டவாறு கொழும்பு 12, புதுச் செட்டித்தெருவில் அமைந்துள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். கிருஷ்ணப்பிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்ட, 2017, மே 12 ஆந் திகதியிடப்பட்ட, 4203 ஆம் இலக்க கூட்டாட்சி வரைபடத்தில், வரிமதிப்பீட்டிலக்கம் 132 M/4, புதுச்செட்டித்தெரு கொழும்பு 12, இடை மாடியில் (Mezzanine Floor) துண்டு இல. CPFMP4 ஐக் கொண்ட ஒரு படை.

துண்ட இல. CPFMP4 ஐக் கொண்ட கடை பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது.

வடக்கு: இந்த கூட்டாட்சித் துண்டம் மற்றும் மேலே CPFOP1 திறந்த வெளி என்பவற்றுக்கிடையிலான சுவரின் மத்தி;

கிழக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் மேலே CPFOP1 திறந்த வெளி என்பவற்றுக்கிடையிலான சுவரின் மத்தி;

தெற்கு: புதுச் செட்டித் தெரிவில் உள்ள வரி மதிப்பீடு இலக்கம் 128 ஐக் கொண்ட வளவைப் பிரிக்கின்ற இந்தக் கூட்டாட்சி துண்டத்தின் சுவரின் மத்தி, இந்தக் கூட்டாட்சித் துண்டம் மற்றும் CE7 மற்றும் CE8 என்பவற்றுக்கிடையிலான சுவரின் மத்தி ;

மேற்கு: இந்த கூட்டாட்சித் துண்டம் மற்றும் CE8, CPFMP5 மற்றும் CE24 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

கீழ் : நில மட்ட தளம்

மேல் : மேலே CPF1P1 (பகுதி) மற்றும் CE17 என்பவற்றின் கொங்கிரீட் தளத்தின் மத்தி

எழுபத்தியெட்டு தசம் ஒன்பது ஏழு சதுர மீட்டர் (78.97 சதுர மீட்டர்) அல்லது எண்ணூற்றைம்பது சதுர அடி (850 சதுர அடி) பரப்பளவைக் கொண்டுள்ளது.

பொது மூலகங்களில் பிரிவிடப்படாத 0.195% சதவீதப் பெறுமதியான பங்கொன்று.

உடனடி பொதுவான பிரதேசம் CE24

(4) மேலே சொல்லப்பட்டவாறு கொழும்பு 12, புதுச் செட்டித்தெருவில் அமைந்துள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். கிருஷ்ணப்பிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்ட, 2017, மே 12 ஆந் திகதியிடப்பட்ட, 4203 ஆம் இலக்க கூட்டாட்சி வரைபடத்தில், வரிமதிப்பீட்டிலக்கம் 132 M/5, புதுச்செட்டித்தெரு கொழும்பு 12, இடை மாடியில் (Mezzanine Floor) துண்டு இல. CPFMP5 ஐக் கொண்ட ஒரு கடை.

துண்டு இல. CPFMP5 ஐக் கொண்ட கடை பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது.

வடக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் மேலே CE24 என்பவற்றுக்கிடையிலான சுவரின் மத்தி;

கிழக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CPFMP4 மற்றும் CE8 என்பவற்றுக்கிடையிலான சுவரின் மத்தி;

தெற்கு: புதுச் செட்டித் தெருவில் உள்ள வரி மதிப்பீடு இலக்கம் 128 ஐக் கொண்ட வளைவைப் பிரிக்கின்ற இந்தக் கூட்டாட்சி துண்டத்தின் சுவரின் மத்தி ;

மேற்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CPFMP6 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

கீழ் : நில மட்ட தளம்

மேல் : மேலே CPF1P14 இன் கொங்கிரீட் தளத்தின் மத்தி

பதிமூன்று தசம் பூச்சியம் மூன்று எட்டு சதுர மீட்டர் (13.038 சதுர மீட்டர்) அல்லது நூற்று நாற்பத்து நான்கு சதுர அடி (144 சதுர அடி) தரைப் பரப்பளவைக் கொண்டுள்ளது.

பொது மூலகங்களில் பிரிவிடப்படாத 0.033% சதவீதப் பெறுமதியான பங்கொன்று.

உடனடி பொதுவான பிரதேசம் CE24

(5) மேலே சொல்லப்பட்டவாறு கொழும்பு 12, புதுச் செட்டித்தெருவில் அமைந்துள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். கிருஷ்ணப்பிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்ட, 2017, மே 12 ஆந் திகதியிடப்பட்ட, 4203 ஆம் இலக்க கூட்டாட்சி வரைபடத்தில், வரிமதிப்பீட்டிலக்கம் 132 M/6, புதுச்செட்டித்தெரு கொழும்பு 12, இடை மாடியில் (Mezzanine Floor) துண்டு இல. CPFMP6 ஐக் கொண்ட ஒரு கடை.

துண்டு இல. CPFMP6 ஐக் கொண்ட கடை பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது.

வடக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் மேலே CPFMP7 மற்றும் CE24 என்பவற்றுக்கிடையிலான சுவரின் மத்தி;

கிழக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் CE24 மற்றும் CPFMP5 என்பவற்றுக்கிடையிலான சுவரின் மத்தி;

தெற்கு: புதுச் செட்டித் தெருவில் உள்ள வரி மதிப்பீட்டு இலக்கம் 128 ஐக் கொண்ட வளைவைப் பிரிக்கின்ற இந்தக் கூட்டாட்சி துண்டத்தின் சுவரின் மத்தி மற்றும் இந்தக் கூட்டாட்சி துண்டம் மற்றும் CE23 என்பவற்றுக்கிடையிலான சுவரின் மத்தி ;

மேற்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CE17 மற்றும் CE18 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

கீழ் : நில மட்ட தளம்

மேல் : மேலே CPF1P13 இன் கொங்கிரீட் தளத்தின் மத்தி

ஐம்பத்தெட்டு தசம் ஒன்று ஆறு சதுர மீட்டர் (58.16 சதுர மீட்டர்) அல்லது அறுநூற்று இருபத்தாறு சதுர அடி (626 சதுர அடி) தரைப் பரப்பளவைக் கொண்டுள்ளது.

பொது மூலகங்களில் பிரிவிடப்படாத 0.144% சதவீதப் பெறுமதியான பங்கொன்று.

உடனடி பொதுவான பிரதேசம் CE24

(6) மேலே சொல்லப்பட்டவாறு கொழும்பு 12, புதுச் செட்டித்தெருவில் அமைந்துள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். கிருஷ்ணப்பிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்ட, 2017, மே 12 ஆந் திகதியிடப்பட்ட, 4203 ஆம் இலக்க கூட்டாட்சி வரைபடத்தில், வரிமதிப்பீட்டிலக்கம் 132 M/7, புதுச்செட்டித்தெரு கொழும்பு 12, இடை மாடியில் (Mezzanine Floor) துண்டு இல. CPFMP7 ஐக் கொண்ட ஒரு படை.

துண்டு இல. CPFMP7 ஐக் கொண்ட கடை பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது.

வடக்கு: புதுச் செட்டித் தெருவில் உள்ள வரி மதிப்பீட்டு இலக்கங்கள் 140, 140/10 மற்றும் 140/11 ஆகிய வளவுகளை பிரிக்கின்ற இந்தக் கூட்டாட்சி துண்டத்தின் சுவரின் மத்தி, இந்தக் கூட்டாட்சித் துண்டம் மற்றும் CE22 என்பவற்றுக்கிடையிலான சுவரின் மத்தி;

கிழக்கு: இந்த கூட்டாட்சி துண்டம் CE22 மற்றும் CPFMP8 என்பவற்றுக்கிடையிலான சுவரின் மத்தி;

தெற்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CPFMP6 என்பவற்றுக்கிடையிலான சுவரின் மத்தி;

மேற்கு: இந்த கூட்டாட்சி துண்டம் மற்றும் CE18 மற்றும் CE17 என்பவற்றுக்கு இடையேயான சுவரின் மத்தி;

கீழ் : நில மட்ட தளம்

மேல் : மேலே CPF1P12 இன் கொங்கிரீட் தளத்தின் மத்தி

பதினேழு தசம் ஆறு ஐந்து சதுர மீட்டர் (17.65 சதுர மீட்டர்) அல்லது நூற்றுத்தொண்ணூறு சதுர அடி (190 சதுர அடி) தரைப் பரப்பளவைக் கொண்டுள்ளது.

பொது மூலகங்களில் பிரிவிடப்படாத 0.044% சதவீதப் பெறுமதியான பங்கொன்று.

உடனடி பொதுவான பிரதேசம் CE24

நியதிச்சட்ட பொது மூலக்கூறுகளுடன் கூடியது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
சபையின் செயலாளர்.

08-24

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2025**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 01.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.07.2025 |
| | | வியாழன் | 07.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.07.2025 |
| | | வெள்ளி | 15.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.08.2025 |
| | | வெள்ளி | 22.08.2025 | .. | நண்பகல் 12 | வியாழன் | 07.08.2025 |
| | | வெள்ளி | 29.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.08.2025 |
| **செத்தெம்பர்** | .. | வியாழன் | 04.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.08.2025 |
| | | வெள்ளி | 12.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.08.2025 |
| | | வெள்ளி | 19.09.2025 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.09.2025 |
| | | வெள்ளி | 26.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.09.2025 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 03.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.09.2025 |
| | | வெள்ளி | 10.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.09.2025 |
| | | வெள்ளி | 17.10.2025 | .. | நண்பகல் 12 | வியாழன் | 03.10.2025 |
| | | வெள்ளி | 24.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.10.2025 |
| | | வெள்ளி | 31.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.10.2025 |

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.